1990 மே,, 7]

விடுதலை வீரர் திருவண்ணாமலை தியாகி திரு. அண்ணாமலைப்பிள்ளை குடியிருந்த வீட்டை வாங்கி நினைவுச் சின்னம் ஏற்படுதும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே :

இல்லை 9-45 மணி

திரு. கே. பிச்சாண்டி : பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட அந்த வீரருடைய இல்லத்தை நினைவுச் சின்னமாக மாற்றினால் எதிர்கால சந்ததியினர் சுதந்திரத்தினுடைய முக்கியத்துவத்தையும், பழைய கால வரலாற்றையும் அறியும் பொருட்டு இதுபோன்ற தியாகிகளுடைய இல்லங்களை நினைவுச் சின்னமாக மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நமது முன்னோர்கள் நமது இனத்திற்காகப் பாடுபட்டவர்களுக்கு, பல்வேறு தலைவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னம் எழுப்புவது, அவர்கள் வாழ்ந்த இல்லங்களை நினைவுச் சின்னமாக அரசு அறிவிப்பது, அரசு அதை எடுத்து அருங்காட்சியகமாக அமைப்பது போன்றவை எல்லாம் பல்வேறு தலைவர்களுக்கு இதுவரை செய்தித் துறையின் சார்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவருக்கும் அரசின் சார்பாக நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமானால் அரசு அதைப் பற்றி ஆலோசனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 5289—திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டத்தில் புதிய பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க தடையேதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை,

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, வறண்டப் பகுதிகளில் பெரும்பாலும் விவசாயிகளுக்குக்கூட பால் மாடு வளர்க்கின்ற தொழில் உப தொழிலாக இருந்து வருகிறது. ஆகையால் பால் சங்கங்களை அமைத்து விவசாயிகளுக்கும், கூலி தொழிலாளர்களுக்கும் உதவியாக பால் சங்கங்களை அமைக்கின்ற் திட்டத்தை அரசு மீண்டும் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருடமும் ஆயிரம் புதிய சங்கங்கள் அமைப்பதற்காக அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே மாவட்டத்திற்கு இத்தனை சங்கங்கள் என்று சொல்லி, பெரியார் மாவட்டம் என்றால் அங்கே கடந்த வருடம் 100 புதிய பால் உற்பத்தியாளர் சங்கம் அனுமதிக்கப்பட்டு சிறந்த முறையிலே ஆரம்பிக்கப்பட்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தெந்த பகுதிகளிலே புதிய சங்கங்கள் தேவை என்றால் அந்தப் பகுதியிலே அந்தச் சங்கங்களை ஆரம்பிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்களிடையே மோதல்.

* 3384— திரு. இரா. மதிவாணன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டம், பழவேற்காட்டில் கடந்த 26—1—1989 அன்று மீன் பிடிப்பதில் மீனவர்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒன்பது மீனவர்கள் உயிர் இழந்தனர் என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு அரசு நிதி உதவி வழங்குமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எட்டு குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு விட்டது. ஒரு குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவது குறித்து பரிசீலனையில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS